நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை, ஆம் ஆத்மி கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் எஸ்.ஏ.என்.வசீகரன், மாநில மகளிர் அணி தலைவி ஸ்டெல்லா மேரி, வடசென்னை மாவட்டத் தலைவர் பாரூக், தென்சென்னை மாவட்டச் செயலாளர் மணிகண்டன் ஆகியோர் நேற்று (12.3.2024), காலை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேரில் சந்தித்தனர்.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு

அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி ஆதரவு!

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினை அக்கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் எஸ்.கர்ணன் சந்தித்து தெரிவித்தார்!

சென்னை, மார்ச் 13 -

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் தமிழ் மாநில குழு மாநிலப் பொதுச்செயலாளர் எஸ்.கர்ணன் மற்றும் மாநில நிர்வாகிகள் நேரில் சந்தித்து எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு அளித்தனர்.

இதுகுறித்த விவரம் வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் தமிழ் மாநிலக்குழு பொதுச்செயலாளர் எஸ்.கர்ணன் மற்றும் தேசியச் செயலாளர்கள் எஸ்.சுரேஷ்தேவன், பி.எஸ்.தேவன் உள்ளிட்ட மாநில நிர்வாகிகள், நேற்று (12.3.2024), காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேரில் சந்தித்து எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலான தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு அனைத்து தொகுதிகளிலும் பாடுபடுவதாக தெரிவித்தனர்.

உச்சநீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து

தேர்தல் பத்திர விவரங்கள் சமர்ப்பிப்பு!

தேர்தல் ஆணையத்திடம் - இந்திய ஸ்டேட் வங்கி வழங்கியது!

புதுடெல்லி, மார்ச்.13-

உச்சநீதிமன்ற உத்தரவை தொடர்ந்து தேர்தல் பத்திர விவரங்களை தேர்தல் ஆணையத்திடம் இந்திய ஸ்டேட் வங்கி அளித்துள்ளது.

கடந்த 2018 ஆம் தேதி பிப்ரவரி மாதம் தேர்தல் பத்திரங்கள் திட்டத்தை ஒன்றிய அரசு அறிவித்தது. தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் தங்கள் அடையாளங்களை வெளிப்படுத்தாமல், அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்க இத்திட்டம் அனுமதி அளிக்கிறது.

இத்திட்டத்தில் வெளிப்படைத் தன்மை இல்லை என்றும் இதன் மூலம் முறைகேடுகள் நடக்க வாய்புள்ளதாகவும் கூறி உச்ச நீதிமன்றத்தில் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களை விசாரித்த தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான அமர்வு, தேர்தல் பத்திர திட்டம் அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது என கடந்த மாதம் 15ஆம் தேதி தீர்ப்பளித்தது. மேலும், 2019 ஏப்ரல் 12ஆம் தேதி முதல் தற்போதுவரை தேர்தல் பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகள் எவ்வளவு நிதி பெற்றுள்ளன? என்ற விவரத்தை மார்ச் 6ம் தேதிக்குள் எஸ்.பி.ஐ தாக்கல் செய்ய வேண்டும் என்றும், இதனை மார்ச் 13ஆம் தேதிக்குள் தேர்தல் ஆணையம் தனது இணையதளத்தில் வெளியிட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனால், இந்த விவரங்களை வெளியிடாமல் ஜூன் 30ஆம் தேதிவரை கால அவகாசம் வழங்குமாறு இந்திய ஸ்டேட் வங்கி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. இந்த மனு விசாரணைக்கு வந்த போது, ஸ்டேட் வங்கியின் கோரிக்கையை ஏற்க நீதிபதிகள் திட்டவட்டமாக மறுத்துவிட்டனர். நாட்டின் மிகப் பெரிய வங்கியால் இந்த தகவல்களை சேகரித்து வழங்க இயலாதா?, இந்த பணியை செய்ய 26 நாட்கள் அவகாசம் போதாதா? என என அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பிய நீதிபதிகள், தேர்தல் பத்திர விவரங்களை 24 மணி நேரத்திற்குள் தேர்தல் ஆணையத்திடம் எஸ்.பி.ஐ. தாக்கல் செய்ய வேண்டும் என்றும், மார்ச் 15ஆம் தேதி மாலை 5 மணிக்குள் தேர்தல் ஆணையம் இதனை இணையதளத்தில் வெளியிட வேண்டும் என்றும் உத்தரவிட்டனர். நீதிமன்ற உத்தரவை செயல்படுத்த தவறினால் எஸ்.பி.ஐ. அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் நீதிபதிகள் எச்சரித்தனர்.

இந்நிலையில், தேர்தல் பத்திர விவரங்களை தேர்தல் ஆணையத்திடம் எஸ்.பி.ஐ. அளித்தது. இதனை தேர்தல் ஆணையமும் உறுதி செய்துள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் புதிய பேருந்து வழித் தடம்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர், மார்ச் 13 -

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், சின்ன ஆனந்தவாடி கிராமத்தில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்ப)லிட், திருச்சி மண்டலம், ஜெயங்கொண்டம் கிளை சார்பில் புதிய பேருந்து வழித்தடத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா முன்னிலையில் நடைபெற்றது.

அதன்படி ஜெயங்கொண்டம் கிளை நகரப்பேருந்து, நகரப்பேருந்து வழித்தடம் எண் 010A, காலை 8.15 மணிக்கு ஜெயங்கொண்டம் ஆனந்தவாடி (வழி) உடையார்பாளையம், பரணம், இரும்புலிகுறிச்சி, சோழன்குறிச்சி வழியாக தொட்டு தினசரி ஒரு நடை இயக்கப்படும்.

இதேபோன்று காலை 9.15 மணிக்கு சின்ன ஆனந்தவாடி ஜெயங்கொண்டம் (வழி) சோழன்குறிச்சி, இரும்புலிக்குறிச்சி, பரணம், உடையார்பாளையம் வழியாக தொட்டு தினசரி ஒரு நடை இயக்கப்படும்.

இப்புதிய பேருந்து வழித்தடம் நீட்டிப் பால் சின்ன ஆனந்தவாடி, சோழன்குறிச்சி பகுதி பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் பயனடைவார்கள். எனவே, இப்பேருந்து வசதியினை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்கு வரத்து கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டல பொது மேலாளர் எஸ்.சக்திவேல், கோட்ட மேலாளர் (பெரம்பலூர்) ஆர்.ராமநாதன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கங்கா தாரிணி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, ஒன்றியச் செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில் மாறன்,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், தொ.மு.ச. நிர்வாகிகள் பி.வி.அன்பழகன், சேகர், கொளஞ்சி, குமார், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஊழியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்டம்

திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதியில்

தமிழ்நிலம் மகிழ்கின்றது, ஒன்றியம் வியக்கின்றது *எனும் தலைப்பில்*

மாபெரும் புகழரங்கம் !

சூரியச்சுடர் - 66

தலைமை :

வழக்கறிஞர் ப.தாயகம்கவி M.L.A.,

கழக துணை அமைப்பு செயலாளர் - திரு.வி.க நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

முன்னிலை

மாண்புமிகு பி.கே.சேகர்பாபு அவர்கள்

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் - சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்

செ.தமிழ்வேந்தன். எம்.சாமிக்கண்ணு. சரிதாமகேஷ்குமார். Dr.யாழினி

Z.ஆசாத்MC., புனிதவதிஎத்திராசன்MC., டி.லோகேஷ், ந.துலுக்காணம்.

பி.உதயசங்கர். P.J.துளசிங்கம், பெரோஸ்கான். பெரம்பூர் மகேஷ். ராஜ்முகமது

வரவேற்புரை : எம்.சரவணன்B.A.,B.L.,MC., M.Z.அபோய். M.A.டீக்கா

புகழரங்கத்தை துவக்கி வைப்பவர்:

திரு. T.K.S.இளங்கோவன்

கழக செய்தித்தொடர்புத் தலைவர்

மக்கள் முதல்வரின் மனிதநேய திருநாள்

நக்கீரன்கோபால். முனைவர் சொற்கோ பாரதிகிருஷ்ணகுமார். மதுக்கூர் ராமலிங்கம்

பங்கேற்போர் :

மேயர் பிரியாராஜன் டாக்டர் கலாநிதிவீராசாமி MP

ரமணிலோகேஷ்MC., தமிழ்செல்விசசிகுமார்MC., ச.அம்பேத்வளவன்MC., பரிமளாசுரேஷ், மா.ருத்ரமூர்த்தி, எஸ்.புஷ்பராஜ்Ex.MC.,

ஜி.கிருஷ்ணகுமார்B.A.,B.L., M.தமீம், பொல்லு டி.சுரேஷ்குமார், வி.கே.வெங்கடேசன், S.வெங்கடேசன், S.சசிகுமார்,

நாள் : 13.03.2024 நேரம் : புதன்கிழமை மாலை 6 மணி இடம் : தொன்போஸ்கோ பள்ளி வளாகம், டிகாஸ்டர் ரோடு, வார்டு எண் : 72